**கவனிக்க.-** 2006.10.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1467 - 2006 ඔක්තෝබර් 13 වැනි සිකුරාදා - 2006.10.13**

*1467 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 944 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 967 |


**கவனிக்க.-** கே. ஆர். ஜீ. விஜேசுந்தர தேசிய மற்றும் ஊழியர் நலன்புரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 20 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(V) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.



13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## இலங்கை நிரந்தர விமானப் படை

வான் படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன :-

1. *(அ)* **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

*(1)* ***வானூர்தி பொறியியல் :***

(i) *வானூர்தி இயந்திரவியலாளர் ;*
(ii) *வான் அமைப்பு எந்திரவியலாளர் :*
*க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானத்தில் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II விஞ்ஞானம் II) சித்தியும் அதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(2)* ***மின்னியலும் தொலைத்தொடர்பும் பொறியியல் :***

(i) *வான் வானொலி இயந்திர வல்லுனர்.-* க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானத்தில் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II விஞ்ஞானம் II) சித்தியும் அதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ii) *தொலைபேசி இயக்குனர் ;*
(iii) *வான் தொலை தொடர்பாளர் ;*
(iv) *கணனி இயக்குனர் :*
க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில், ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/விஞ்ஞானம் II)

*(3)* ***பொது பொறியியல் :***

(i) *இயக்குனர் மோட்டார் போக்குவரத்து.-* க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/விஞ்ஞானம் II) அத்துடன் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

*(4)* ***சிவில் பொறியியல் :***

(i) *மின்சார வேலையாளர் ;*
(ii) *இயந்திர இயக்குனர் ;*
(iii) *வளிச்சீராக்கி, குளிர்சாதனப்பெட்டி திருத்துபவர் :*
*க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானத்தில் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II விஞ்ஞானம் II) சித்தியும் அதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(iv) *நீர்க்குழாய் பழுதுபார்ப்பவர்.-* க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II விஞ்ஞானம் II)

*(5)* ***வைத்தியம் :***

(i) *தாதி உதவியாளர் ;*
(ii) *பல் தொழினுட்பவியலாளர் :*
க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/விஞ்ஞானம் II) ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த. ) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 03 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் உயர் பயிற்சி நெறிக்கான தகைமையாகக் கருதப்படும்.

*(6)* ***வழங்குனர் :***

(i) *வழங்குனர்.-* க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, ஆங்கிலத்தில் சித்தியும் கணிதம்/ விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/ விஞ்ஞானம் II) ஆகியவற்றுள் ஒரு திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ii) *உணவக மேற்பார்வையாளர்.-* க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில், ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/விஞ்ஞானம் II)

(iii) *உணவுப் பரிகார உதவியாளர்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உற்படுத்தப்படுமாயின் 1999/ 2000 ஆண்டுகளில் கணிதம் விண்ணப்பதாரியாயின் II /விஞ்ஞானம் II).

(7) ***பரிபாலனம்*** :

(i) *எழுதுவினைஞர்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, ஆங்கிலத்தில் சித்தியும் கணிதம்/ விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/ விஞ்ஞானம் II) ஆகியவற்றுள் ஒரு திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள், கணனிகள் பற்றிய அறிவும் அனுபவமும் விசேட தகைமையாக கருதப்படும்.

(ii) *கணக்கியல் எழுதுவினைஞர்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II) ஆகியவற்றுள் ஒரு திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (6 பாடங்களில் விஞ்ஞானம் சேர்க்கப்படுமாயின் 1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் விஞ்ஞானம் II).

(8) ***தொழிற்பாடுகள்*** :

(i) *வான்தொழிற்பாடுகள்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/விஞ்ஞானம் உற்படுத்தப்படுமாயின் 1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II /விஞ்ஞானம் II).

(ii) *தீயணைப்பாளர்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழியில், ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/விஞ்ஞானம் உற்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II /விஞ்ஞானம் II).

(iii) *துப்பாக்கியாளர்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/விஞ்ஞானம் உற்படுத்தப்படுமாயின் 1999/ 2000 ஆண்டுகளில் கணிதம் II/விஞ்ஞானம் II).

(9) (i) *பொலிஸ்.*- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில், ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/விஞ்ஞானம் உற்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/விஞ்ஞானம் II).

(ஆ) **ஏனைய தகைமைகள்**.- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) *வயது.*- 2006, திசெம்பர் 31 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(3) *உயரம்.*- 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

(4) *உடல் நிறை.*- உடற் பருமன் சுட்டி (BMI = நிறை (கி.கி.) <25
உயரம் (மீ) 2

(5) *மார்பு.*- ஆண் 32" (குறைந்தது)

(6) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.*- CP2

(7) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(8) *குடியியல் நிலை.*- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 01 (அ) தேவைப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்டிராதவர்களும் பந்தி 01 (ஆ) இல் தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்டபட்டவர் களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் (இரண்டாம் அல்லது மூன்றாம் தர) வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். இது தொடர்பான உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். 05 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 07 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுமாறு அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப் படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப் பங்கள் உண்டு.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப் படும் விண்ணப்பகாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும்** :

(அ) ***சம்பள விகிதங்கள்***.- ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

*வானூர்தியாளர் : ரூபா 1,66,560 - 7 X 1,440- 10 X 1,800-ரூபா 1,94,640*

*முன்னணி வானூர்தியாளர் : ரூபா 1,70,880- 4 X 1,440 - 11 X 1,800-ரூபா 1,96,440*

*கோப்ரல் : ரூபா 1,75,200 - 1 X 1,440 - 13 X 1,800- ரூபா 2,00,040*

*சார்ஜன்ட் : ரூபா 1,78,440 - 10 X 1,800 - 2 X 2,520- 1 X 3,480-ரூபா 2,049,960*

*பிளைட் சார்ஜன்ட் : ரூபா 1,82,040 - 8 X 1,800- 2 X 2,520 - 3 X 3,480-ரூபா 2,11,920*

*அதிகாரம் பெற்ற அலுவலர் : ரூபா 1,89,240 - 4 X 1,800 - 2 X 2,520 - 9 X 3,480-ரூபா 2,32,800*

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள்*** :

(1) *வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு*.- ரூபா 1,000.00 ;

(2) *கடினப்படி*.- மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) *கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு*.- மாதமொன்றுக்கு ரூபா 1,900.00 வழங்கப்படும்.

(4) *விசேட கடினப்படி*.- விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன் றுக்கு ரூபா 2,400.00 வழங்கப்படும். யாழ் குடா நாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதமும் வழங்கப் படும் ;

(5) *உற்சாகமூட்டும் கொடுப்பனவு*.- சேவைக் காலம் 5 வருடம் பூர்த்தியடைந்தபின் இக்கொடுப்பனவு வழங்கப்படும். (மாதமொன்றுக்கு ரூபா 250 இருந்து ரூபா 850 வரை) ;

(6) *உணவு கொடுப்பனவு*.- வெளியில் தங்கும் வான்படை வீரருக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 (உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவச உணவு வசதி) ;

(7) *தங்குமிட வசதி*.- உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவசம் ;

(8) *பிரயாணம்*.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரருக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்), உள்ளே தங்கியி ருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொருதடவை சொந்த இருப்பிடம் போய்வருதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(9) *கலவரகாலப்படி*.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது கிக் கொடுப் பனவு வழங்கப்படும். கடமைக்குச் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(10) *தகைமைச் சம்பளம்*.- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான் படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(11) *நன்னடத்தைப் பதக்க சம்பளம்*.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இருந்து ரூபா 204 வரை வழங்கப் படும் ;

(12) *சீருடை கொடுப்பனவு*.- மாதமொன்றுக்கு ரூபா 170.00 வழங்கப்படும் ;

(13) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்*.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணி யினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(14) *மருத்துவம்*.- வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பங் களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்யப்படும் ;

(15) வெளியில் தங்கியிருப்பவர்களுக்கும் வேலைத் தளத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ.போ.ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச்சீட்டு வழங்கப்படும் ;

(16) விவாகமான வான்படை வீரருக்கு அரசாங்கத்துக் குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிரா விடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவ ராவர் ;

(17) *விரிவுரையாளர் கொடுப்பனவு.*- மாதமொன்றுக்கு ரூபா 425 இருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(18) *வேறு கொடுப்பனவுகள்.*- (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்ட திட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(19) *ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு.*- காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுவன ஆகும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத் திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

8. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்துதல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2006, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "தலைவர், ஆள் திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீரர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஒரு விண்ணப்பக்காரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். முடிவு திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான் படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடு களுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதலொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப் பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றுக்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்கார்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. நேர்முக பரீட்சைக்கு தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பக்காரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீசையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைகள் இலங்கை வான்படை கொக்கல, வீரவில, அநுராதபுரம், கொழும்பு ஆகிய நிலையங்களில் நடைபெறுவதால் நேர்முகப் பரீட்சையொன் றுக்குத் தோற்ற விரும்பும் வான்படை நிலையத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பக்கார ருக்கு திகதி, நேரம், இடம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்த மானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப் படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரைத் தகைமையிழக்கச் செய்யும்.

*13.* விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

*14.* நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டப்ளியு. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரருக்கான பதவி

நேர்முகப் பரீட்சைக்கு வர விரும்பும் வான்படை நிலையம் :-----.

(இலங்கை வான்படை வீரவில, கொக்கல, அநுராதபுரம், கொழும்பு நிலையங்களில் ஒன்றைத் தெரிவு செய்க.)

1. முழுப் பெயர் :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையிலுள்ளவாறு) :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.

3. விண்ணப்பிக்கும் ~~தொழில் துறை :-----~~.

4. அஞ்சல் முகவரி :-----.

5. நிரந்தர முகவரி :-----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :-----.

7. மாவட்டம் :-----.

8. தேர்தற் தொகுதி :-----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.

10. தொலைத்தொடர்பு இலக்கம் :-----.

11. பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.

(வயது 2006.10.30 ஆந் திகதி அன்று உள்ளவாறு
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :-----.

13. உயரம் : ............ அடி .................... அங்குலம் (........... செ.மீ.)

14. க. பொ. த. (சா.த.) பரீட்சை

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி, அனுபவம் முதலியன) :-----.

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விவரம் : -----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :-----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :-----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ?

21. நற்சாட்சிப் பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :-----.

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிடப்படவேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக் கொண்டுள்ளேன்.

....................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :-----.

10-260

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்*

*(நிரந்தர/தொண்டர்)*

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் நேரடி அரசாணை யமர்வுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :-

(அ) தொழில்நுட்ப இயந்திரவியல் பிரிவு (தொண்டர்-ஆண்)

(ஆ) தொழில்நுட்ப சமிஞ்ஞைகள் பிரிவு (நிரந்தர-ஆண்)

(இ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (நிரந்தர-ஆண்)

(ஈ) மருத்துவப் பிரிவு (நிரந்தர/தொண்டர்-ஆண்/பெண்)

(உ) பல் மருத்துவப் பிரிவு (நிரந்தர/ தொண்டர்-ஆண்/ பெண்)

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரி களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) **தொழில்நுட்ப இயந்திரவியல் பிரிவு**.- (1) *தொழில்நுட்ப இயந்திரவியல் அதிகாரி*.- வானூர்தி தொழினுட்பவியல்/ இயந்திரவியல்/ மின் பொறியியலில் BSc/ MSc பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். ரஷ்ய நாட்டு வானூர்தியும் இயந்திரமும் சம்பந்தமான அறிவும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஆ) **தொழில்நுட்ப சமிஞ்ஞைகள் பிரிவு**.- *இலத்திரனியல் தொலைத்தொடர்பு பொறியியல் அதிகாரி*.- இலத்திரனியல்/ தொலைத்தொடர்பு பொறியியல் BSc பட்டச் சான்றிதழ் அல்லது இலத்திரனியல்/தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (NDT) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.

(இ) **நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (சங்கீத வாத்திய வல்லுனர்)**.-
*(i) சங்கீத வாத்திய வல்லுனர்-நடனக் கலைக்குழு :*

(அ) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம், சங்கீதம் உட்பட 04 திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இலங்கை கலைக் கல்விக்கூடம் (நடனம்) ஒன்றில் பெற்ற கலைப்பட்டம் அல்லது தேசிய மட்டத்தில் நடனமும் சங்கீதமும் இறுதிப் பரீட்சையில் (நடனம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய, விதேசிய நடனப்பாணிகளை பயிற்றுவிக்கும் திறன் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) கீழைத்தேய, மேலைத்தேய நடனங்களை பயிற்சியளித்து நெறிப்படுத்தும் திறன் விசேட தகைமையாகக் கருதப்படும்.

*(ii) சங்கீத வாத்திய வல்லுனர்-கீழைத்தேய வாத்தியக்குழு :*

(அ) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம், சங்கீதம் உட்பட 04 திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை கலைக்கல்விக் கூடம் (சங்கீதம்) ஒன்றில் பெற்ற கலைப்பட்டம் அல்லது தேசிய மட்டத்தில் நடனமும் சங்கீதமும் இறுதிப்பரீட்சையில் (சங்கீதம்) சித்திபெற்றிருத்தல் வேண்டும். அல்லது இந்தியாவில் "பாத்கண்ட" சங்கீதக் கல்லூரியில் "விஷாரத" 2 ஆம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(இ) கீழைத்தேய, மேலைத்தேய இசைக்குழுக்களை பயிற்சியளித்து நெறிப்படுத்தும் திறன் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஈ) கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதம் உருவாக்கும் திறமையும் கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியக் கருவிகளை சுருதி அமைக்கும், இசைக்கும் திறமை விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) **மருத்துவப் பகுதி**.- *மருத்துவ அதிகாரி*.- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் MBBS பட்டதாரி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் இலங்கை மருத்துவச் சபையில் பதிவாகியிருத்தல் வேண்டும். விசேட அல்லது உயர் தகைமைகளுக்கு நேர்முகப் பரீட்சையில் முன்னுரிமையளிக்கப்படும்.

(உ) **பல் மருத்துவப் பகுதி**.- *பல் மருத்துவ அதிகாரி*.- பல் மருத்துவப் பட்டம் BDS அல்லது அதற்குச் சமமான ஏதேனுமொரு சான்றிதழ் இருத்தல் வேண்டும் ; அத்துடன் இலங்கை மருத்துவச் சபையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்*.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) *உயரம்*.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும். பெண்கள் 5 அடி 2 அங்குலமும் அதற்கு மேலும் (மருத்துவ, பல் மருத்துவ பிரிவு அல்லாதவர்களுக்கு) ;

(இ) *மார்பு*.- ஆண் 32" (குறைந்தது) ;

(ஈ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்*.- CP2 ;

(உ) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ;

(ஊ) *வயது :*

(1) தொழில்நுட்ப இயந்திரவியல் பிரிவு.- 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(2) தொழில்நுட்ப சமிஞ்ஞைகள் பகுதி 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 28 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(3) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்கள்).- 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(4) மருத்துவப் பிரிவு (ஆண்கள்/பெண்கள்).- 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(5) பல் மருத்துவ பிரிவு (ஆண்கள்/ பெண்கள்).- 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

4. தேவையான உயரம், நிறை, மார்புச் சுற்றளவு முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்தியப் பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. தகைமைகளையும் அனுபவத்தையும் பொருத்து தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான் படையில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினன்ட் தரத்தில் ஆணை பெற்ற பதவி வழங்கப்படும்.

8. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள், இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப் படுத்தப்படுவர்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப் பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஆபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி அமையும் "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்கு கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் II ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான் படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப் பின் ஏற்புடையதாகும்.

11. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

12. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப் படும்.

13. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (15) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

14. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் வைத்திய, பல் வைத்திய அலுவலர்கள் அல்லாத ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

*பைலற் ஆபீசர் :* ரூபா 1,98,960

*பிளையிங் ஆபீசர் :* ரூபா 2,75,220 - 30 X 7,740 - ரூபா 5,07,420.

*பிளைற் லெப்டினன்ட் :* ரூபா 3,21,660 - 24 X 7,740 - ரூபா 5,07,420.

*ஸ்கொட்ரன் லீடர் :* ரூபா 3,52,620 - 20 X 7,740 - ரூபா 5,07,420.

*விங் கொமாண்டர் :* ரூபா 3,62,100 - 15 X 9,480 - ரூபா 5,04,300.

*குறூப் கப்ரன் :* ரூபா 4,41,060 - 17 X 12,600 - ரூபா 6,42,660.

(ஆ) இலங்கை வான்படையில் வைத்திய, பல் வைத்திய ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு)

(1) ***மருத்துவ பிரிவு :***

*அடிப்படைப் பிரிவு :* ரூபா 3,13,920-2X7,740-3,29,400
*இரண்டாம் பிரிவு :* ரூபா 3,37,140-8X7,800-3,99,540
*முதலாம் பிரிவு :* ரூபா 4,12,140-15X12,600-6,01,140
*விஷேட பிரிவு :* ரூபா 5,08,680-12X15,720-6,97,320

(2) ***பல் மருத்துவ பிரிவு :***
*இரண்டாம் பிரிவு :* ரூபா 3,06,180-4X7,740-8X7,800-3,99,540
*முதலாம் பிரிவு :* ரூபா 4,12,140-16X12,600-6,01,140

(இ) மருத்துவ, பல் மருத்துவ அதிகாரிகளுக்குரிய வேறு கொடுப்பனவுகள்-

(1) ***ஓய்வூதியக் கொடுப்பனவுகள் (மாதமொன்றுக்கு) :***

*அடிப்படைப் பிரிவு :* ரூபா 1,700
*இரண்டாம் பிரிவு :* ரூபா 1,700
*முதலாம் பிரிவு :* ரூபா 3,400
*விஷேட பிரிவு :* ரூபா 3,400

(2) ***ஓய்வூதியமல்லாத கொடுப்பனவுகள் (மாதமொன்றுக்கு) :***

*அடிப்படைப் பிரிவு :* ரூபா 2,125
*இரண்டாம் பிரிவு :* ரூபா 1,700
*முதலாம் பிரிவு :* ரூபா 400

(3) ***கடமை தொடர்பல்லாத கொடுப்பனவுகள் :*** *ரூபா 5,000*

(4) ***மேலதிக கடமை கொடுப்பனவுகள் :***

*அடிப்படைப் பிரிவு : ரூபா 105*
*இரண்டாம் பிரிவு : ரூபா 140*
*முதலாம் பிரிவு : ரூபா 150*

(5) சேவைக் கொடுப்பனவுகள் பந்தி 15 (ஈ) உள்ளவாறு அமையும்-

(ஈ) **வேறு கொடுப்பனவுகள் :**

(1) *வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு.-* ரூபா 1,375

(2) *உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.-* ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூ. 250.00 வீதம் வழங்கப்படும்

(3) *கடினப்படி.-* மாதமொன்றுக்கு ரூபா 600

(4) *விசேட கொடுப்பனவு.-* யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிப வர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400.

(5) *யாழ். குடாநாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு விசேட கொடுப்பனவு.-* ரூபா 3,000

(6) *சீருடை பேணுதல் படி.-* மாதமொன்றுக்கு ரூபா 255

(7) *சேவையாளர் படி.-* மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(8) *உணவுப் படி.-* மாதமொன்றுக்கு ரூபா 6,213.64 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) *ஏற்புடைத்தாகுமிடத்து, தகைமைப்படி.-* மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை.

(10) ஆண்டொன்றுக்கு 3 சோடி விடுமுறை புகையிரதப் பிரயா ணப்பத்திரம் (அலுவலருக்கும் மனைவிக்கும் பிள்ளை களுக்கும்)

(11) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு

(12) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்

(13) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத் தினருக்கும்)

(14) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து முப்பது மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(15) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (ஃபைலற் ஒபீசரில் இருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு (ரூபா 1,500-3,850) வாடகைப் படிகள் கொடுக்கப்படற் பாலனவாகும்.

(16) *சேவை கொடுப்பனவுகள்.-* ரூபா 300, ரூபா 400, ரூபா 500 ஆக அமையும். (மருத்துவ, பல் மருத்துவ அதிகாரிகளுக்கு மாத்திரம்)

(17) *மேலதிக சேவை கொடுப்பனவுகள்.-* மாதமொன்றுக்கு ரூபா 1,500 (மருத்துவ, பல் மருத்துவ அதிகாரிகளுக்கு மாத்திரம்)

16. ஒய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப் படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-** (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எல்லா கூடுகளும் கூடியவரை விரிவான விபரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள், 2006.12.30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொடை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவலுக்கான விண்ணப்பம் .......................................................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொடை, ஏக்கலை, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் "திணைக்களத்தின்/கூட்டுத்தாபனத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும்" இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப் படின் விடுவிக்கப் படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்குத் தேவையான கல்வித் தகைமை களை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பக்காரரை நன்கு அறிந்தவரான பொறுப்பு வாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத் துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(5) விண்ணப்பகாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு.**- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக கொண்டுவருதல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பக்காரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவுசெய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல், நேர்முகப் பரீட்சை முதலியன**- மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களில் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவுசெய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும். இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(இ) இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(ஈ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகுதியிழக்கச் செய்யும்.

(உ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயர் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண் 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

நிரந்தர/தொண்டர் வான் படையின்....................... கிளை

அரசாணையமர்வு அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

இலங்கைப் பிரஜையாயின், வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா ? (பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக) :----.

2. முழுப் பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு) :----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.
(2006.12.31 அன்று வயது)

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

7. உயரம் :----.

8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.

9. மாவட்டம் :----.

10. தேர்தல் தொகுதி :----.

11. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :-

| பாடசாலை/சர்வ கலாசாலை பெயர்கள் | பரீட்சை<br>க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த), தொழில் தகைமைகள்/வேறு | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | | | |

15. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

16. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

17. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

18. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.

(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக.) :----.

19. புறம்பான சாதனைகள், பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும்தரவும்.) :----.

20. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

21. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

22. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

23. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்க துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில்/ (மத்திய வங்கி/ தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டி லுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

24. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

25. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :-**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்துகொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-259

---

## இலங்கை நிரந்தர வான்படை

### பயிலிளவல் அலுவலர் (ஆண்) வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு
(ஆ) உபகரணப் பிரிவு
(இ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு
(ஈ) வான் வழி நடத்துனர் பிரிவு

2. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

* *பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு ;*
* *உபகரணப் பிரிவு ;*
* *வான் வழி நடத்துனர் பிரிவு :*
குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II, விஞ்ஞானம் II), ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழ் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய/ பழைய) பாடத்திட்டங்களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல்/ வர்த்தகம் பிரிவில் 2 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

* *நிருவாக ரெஜிமன்ட் பிரிவு.-* குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II, விஞ்ஞானம் II), ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழ் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய/ பழைய) பாடத்திட்டங்களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல்/ வர்த்தகம்/ கலை பிரிவில் 2 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*3.* **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்ப தாரிகள் இலங்கை வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) *தேசிய இனம்.*- ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.*- 2006, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்.*- 5 அடி 5 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) *உடல் நிறை.*- உடற்பருமன் சுட்டி- $\frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ) } 2} < 25$

(உ) *மார்பு.*- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.*- CP2

(எ) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) *குடியியல் நிலை.*-தேர்வுநாடிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும், ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத் துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. இரண்டாம், மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

*6.* **சேவை நிபந்தனைகள்** :

(அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை அவர் பெறுவார்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையிலுள்ள அத்தகைய இடங்களில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் சீருடைகள் அனைத்தும் உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரி களினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தமொன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் (ஊ), (எ) தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 20 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்துகொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 2 இலும் 3 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப் பரீட்சையில் சித்திபெறும் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். (எல்லா விண்ணப்ப தாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்குசெய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர்) இந்தச் சோதனைகளில் திருப்திகரமாகச் சித்தி பெற்ற விமான ஓட்டுனர் விண்ணப்பதாரிகள் விமானத்தில் பறத்தல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

(ஔ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அ‍அ) எல்லா அலுவலருக்கும் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.**- (அ) இலங்கை வான்படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்குமான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

*பயிலிளவல் :* ரூபா 1,78,440
*பைலற் ஆபீசர் :* ரூபா 1,89,240
*ஃபிளையிங் ஆபீசர் :* ரூபா 2,75,220-30X7,740-ரூபா 5,07,420
*ப்ளைற் லெப்டினன்ட் :* ரூபா 3,21,660-24X7,740-5,07,420
*ஸ்குவாட்ரன் லீடர் :* ரூபா 3,52,620-20X7,740-ரூபா 5,07,420
*விங் கமான்டர் :* ரூபா 3,62,100-15X9,480-ரூபா 5, 04,300
*குறூப் கப்ரன் :* ரூபா 4,41,060-17X12,600-ரூபா 6,42,660.

(ஆ) ***ஏனைய கொடுப்பனவுகள் :***

(1) *வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு :* ரூபா 1,000
(2) *உற்சாகமூட்டுக் கொடுப்பனவு :* ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.
(3) *கடினப்படி :* மாதமொன்றுக்கு ரூபா 600
(4) *விசேட கொடுப்பனவு :* யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400
(5) *விசேட கொடுப்பனவு :* யாழ் குடாநாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதமும் கொடுப்பனவு வழங்கப்படும்)
(6) *சீருடை பேணுதல் படி :* மாதமொன்றுக்கு ரூபா 255
(7) *சேவையாளர் படி :* மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)
(8) *உணவுப்படி :* மாதமொன்றுக்கு ரூபா 6,213.64 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)
(9) *ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி.*- (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).
(10) ஆண்டொன்றுக்கு 3 சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)
(11) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.
(12) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்
(13) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).
(14) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து முப்பது மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. பொ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.
(15) *பறத்தல் சம்பளம்.*- மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 340 இலிருந்து ரூபா 1,700 வரை (பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்காகும்.)
(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (ஃபைலற் ஆபீசரில் இருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,500 - ரூபா 3,850) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

8. **ஓய்வூதியங்கள்/ பணிக்கொடைகள்.**- ஓய்வூதியங்கள்/ பணிக்கொடைகள் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 இன் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள் அனாதைகள் (ஆயுதங் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை அனாதை (ஆயுதங் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடிபடியானவாகும்.

10. (அ) **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடிய வரை விரிவான விபரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2006.10.30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப் படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவலுக்கான விண்ணப்பம் - .................. கிளை" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்த லின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்கசேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக்கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப் பிரதிகளை பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் /அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்).

(4) இரு குணநலச் சான்றிதழ்கள், இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஆள் ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(V) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) விண்ணப்பங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும் போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல் நேர்முகப்பரீட்சை முதலியன.-** (அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும். தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச்சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித்தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் தேதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வு நாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக்க,
எயர் மாஷல்,
வான் படை ஏவுநர்

தலைமைக் காரியாலயம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

............... கிளையில் பயிலிளவல் அலுவலர் பதவி

1. முழுப் பெயர் :----.
(தேசிய அடையாள அட்டையிலுள்ளவாறு)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. தற்போதைய அஞ்சல் முகவரி : ----.

4. நிரந்தர முகவரி : ----.

5. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

6. மாவட்டம் :----.

7. தேர்தற் தொகுதி :----.

8. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

9. தொலைபேசி இலக்கம் :----.

10. பிறந்த திகதி : ----.

வயது : (2006.12.31 க்கு )
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

11. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? : ----.

12. தேசிய இனம் : ----.
(இலங்கை பிரஜையாயின் வம்சவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).

13. உயரம் :-
அடி ----, அங்குலம் ----.

14. பாடசாலை அத்துடன் /அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ பல்கலைக்கழகம் பெயர்கள் | திகதி | | பொதுப் பரீட்சைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | சேர்ந்தது | விலகியது | |
| | | | |

15. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் : ----.

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

16. பெற்றோர் பற்றிய விபரங்கள் :----.

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

17. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

18. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.

(குழுக்கள் பற்றிய விபரங்களையும், பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

19. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக) :----.

20. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை: ----.

21. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக. : ----.

22. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது பிணையில் விடப்பட்டீரா? அப்படியாயின் விபரங்கள் தருக: ----.

23. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில் /சபையில் கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ----.

24. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்: ----.

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

25. **விண்ணப்பதாரி கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :-**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகின்றேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

..............................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :----.

26. **விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை : -**

(அ) இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 25 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் .................................... இவருக்கு நான் பெற்றோர்*/பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பகாரர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன்–

(i) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்.

(ii) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக்கு காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை

விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்.

----.
பெற்றோர் */பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி : ----.
திகதி : ----.

....................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி : ----.
திகதி : ----.

....................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

10-258

---

## இலங்கை நிரந்தர விமானப் படை

வான் படை வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன :-

1. (அ) **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(1) ***உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர்***.- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II/ விஞ்ஞானம் II) விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திலான திறமைகள் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(2) ***துப்பாக்கியாளர்***.- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் 1999/2000 ஆண்டு களில் விண்ணப்பதாரியின் (கணிதம் II விஞ்ஞானம் II)

(ஆ) ***ஏனைய தகைமைகள்***.- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) *தேசிய இனம்*.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) *வயது*.- 2006, திசெம்பர் 31 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(3) *உயரம்*.- 5 அடி 2 அங்குலமும் அதற்கு மேலும்.

(4) *உடல் நிறை*.- உடற் பருமன் சுட்டி (BMI = நிறை (கி.கி.) <25
உயரம் (மீ) 2

(5) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்*.- CP2

(6) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) *குடியியல் நிலை*.- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 01 (அ) தேவைப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்டிராதவர்களும் அல்லது இதற்கு சமமான தகைமைகளைக் கொண்டிராதவர்களும் பந்தி 01 (ஆ) இல் தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் உடற்பயிற்சி சம்பந்தமான திறமைகளை கொண்டிருத்தல் நேர்முகப் பரீட்சைக்கு அவசியமாகும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். உடற்பயிற்சி சம்பந்தமான திறமைகளை பரிசீலிக்கும் பரீட்சையும் நேர்முகப் பரீட்சை நாளில் நடாத்தப்படும்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) வான்படை வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்படட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீராங்கனைகளுக்கு அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்த மாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள் :**

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் (இரண்டாம் அல்லது மூன்றாம் தர) வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். இது தொடர்பான உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப் படுவார்கள். இதன் பின் 05 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 07 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுமாறு அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு

பொருத்தமான வானூர்தியாளர் களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவு செய்யப் படும் விண்ணப்பகாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ***சம்பள விகிதங்கள்.***- ஒரு வருடத்திற்கு வான்படை வீராங்கனைகளுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

*வானூர்தியாளர் : ரூபா 1,66,560 - 7 X 1,440- 10 X 1,800-ரூபா 1,94,640*

*முன்னணி வானூர்தியாளர் : ரூபா 1,70,880- 4 X 1,440 - 11 X 1,800-ரூபா 1,96,440*

*கோப்ரல் : ரூபா 1,75,200 - 1 X 1,440 - 13 X 1,800- ரூபா 2,00,040*

*சார்ஜன்ட் : ரூபா 1,78,440 - 10 X 1,800 - 2 X 2,520- 1 X 3,480-ரூபா 2,049,060*

*பிளைட் சார்ஜன்ட் : ரூபா 1,82,040 - 8 X 1,800- 2 X 2,520 - 3 X 3,480-ரூபா 2,11,920*

*அதிகாரம் பெற்ற அலுவலர் : ரூபா 1,89,240 - 4 X 1,800 - 2 X 2,520 - 9 X 3,480-ரூபா 2,32,800*

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) *இடைக்கால கொடுப்பனவு I.*- மாதமொன் றுக்கு ரூபா 1,000.00 ;

(2) *இடைக்கால கொடுப்பனவு II.*- மாதமொன் றுக்கு ரூபா 1,200.00 ;

(3) *வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.*- ரூபா 1,000.00 ;

(4) *கடினப்படி.*- மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(5) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர் களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1,900.00 வழங்கப்படும்.

(6) *விசேட கடினப்படி.*- விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400.00 வழங்கப் படும். யாழ் குடாநாட்டில் சேவையாற்றுபவர் களுக்கு ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதமும் வழங்கப்படும் ;

(7) *உற்சாகமூட்டும் கொடுப்பனவு.*- சேவைக் காலம் 5 வருடம் பூர்த்தியடைந்தபின் இக் கொடுப்பனவு வழங்கப்படும். (மாதமொன் றுக்கு ரூபா 250 இருந்து ரூபா 850 வரை) ;

(8) *உணவு கொடுப்பனவு.*- வெளியில் தங்கும் வான்படை வீராங்கனைக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 (உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவச உணவு வசதி) ;

(9) *தங்குமிட வசதி.*- உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவசம் ;

(10) *பிரயாணம்.*- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளை களுக்கும்), உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொருதடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிக மாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(11) *கலவரகாலப் படி.*- நிரந்தரமான நிலையங் களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும். (விவாக மானவர், விவாகமாகாதவர் என்பதற் கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(12) *தகைமைச் சம்பளம்.*- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான் படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகை மைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன் றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(13) *நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.*- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இருந்து ரூபா 204.00 வரை வழங்கப்படும் ;

(14) *சீருடை கொடுப்பனவு.*- மாதமொன்றுக்கு ரூபா 170.00 வழங்கப்படும் ;

(15) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்.*- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாத மொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(16) *மருத்துவம்.*- வான்படையின் செலவில் வான் படை வீராங்கனைக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்யப்படும் ;

(17) வெளியில் தங்கியிருப்பவர்களுக்கும் வேலைத் தளத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்று வட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீராங்கனை களுக்கு இ.போ.ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(18) விவாகமான வான்படை வீராங்கனைகளுக்கு அரசாங்கத்துக்குரிய விவாகமானவர்களுக் கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன் றுக்கு ரூபா 1,100 இருந்து 3,000 வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவரா வர் ;

(19) விரிவுரையாளர் கொடுப்பனவு : மாதமொன் றுக்கு ரூபா 425 இருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(20) வேறு கொடுப்பனவுகள் : (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்ட திட்டங் களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப் படும் ;

(21) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுவன ஆகும். வான்படை வீராங்கனைகள் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத் துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங் கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

6. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்துதல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2006, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "தலைவர், ஆள் திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஒரு விண்ணப்பக்காரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். முடிவு திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான் படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப் பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதலொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப் படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப் பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றுக்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. நேர்முக பரீட்சைக்கு தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பக் காரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலை யில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீசையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைகள் இலங்கை வான்படை ஏக்கலை, கொழும்பு நிலையங்களில் நடைபெறுவதால் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற விரும்பும் வான்படை நிலையத்தை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பக்காரர்களுக்கு திகதி, நேரம், இடம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்த மானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப் படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற

புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரைத் தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீராங்கனைகளுக்கான ................................ பதவி

நேர்முகப் பரீட்சைக்கு வர விரும்பும் வான்படை நிலையம் :-----.

(இலங்கை வான்படையின் ஏக்கலை, கொழும்பு நிலையங்களில் ஒன்றைத் தெரிவு செய்க.)

1. முழுப்பெயர் :-----.
(தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளவாறு) :-----.

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :-----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :-----.

4. அஞ்சல் முகவரி :-----.

5. நிரந்தர முகவரி :-----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :-----.

7. மாவட்டம் :-----.

8. தேர்தற்றொகுதி :-----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.

10. தொலைத்தொடர்பு இலக்கம் :-----.

11. பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.

வயது (2006.12.31 ஆந் திகதி அன்று உள்ளவாறு) :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :-----.

13. உயரம் : ........... அடி .................. அங்குலம் (.......... செ.மீ.)

16. க. பொ. த. (சா.த.) பரீட்சை :

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :-----.

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விவரம் : -----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத் தக்க வேறு சாதனைகள் :-----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :-----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ?

21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |
| | | |

*22.* **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப் படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப் பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

....................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :-----.

10-261

---

**வாழ்க்கைத் தொழில், தொழினுட்ப பயிற்சி அமைச்சு**

தொழினுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம்
[*2197* – SRI (SF)]

ADB நிதி வழங்கப்படும் தொழினுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம், வாழ்க்கைத் தொழில், தொழினுட்பப் பயிற்சி அமைச்சின்கீழ் அமுல் நடத்தப்படுகிறது. இதன் நோக்கம் தொழில் வினைஞருக்கும் தொழினுட்பவியலாளருக்கும் உள்ள கோரிக்கைக்கும் வழங்கலுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பதற்கான அரசாங்க மூலோபாயத்துக்கு பின்வரும் வகையில் உதவுவதாகும் :-

(i) தொழில்வினைஞர் கல்வியை வழங்கும் தொழினுட்பக் கல்லூரிகளை (CoTs) வலுவூட்டுதல்.

(ii) சந்தையின் தேவைக்கு உகந்த தொழினுட்பக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி (TEVT) முறைமைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும், வாழ்க்கைத் தொழில், தொழினுட்ப பயிற்சி அமைச்சுக்கும் (MV & TT) துணைபுரியுமுகமாக வலுவூட்டுதல்.

(iii) தொழினுட்ப மற்றும் தொழினுட்பவியல் கல்வியில் கவனக் குவிப்பை ஏற்படுத்தும் தொழில்சார் தொழினுட்பவியல் (UNIVOTEC) பல்கலைக்கழகத்தை நிறுவுதல்.

இச்செயற்றிட்டமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவிபெறும் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கான திட்டத்தின் (SDP) குறிப்பாக, தேசிய தொழில்சார் தகைமை (NVQ) சட்டகத்தின் வெளியீடுகளைக் கட்டியெழுப்புவதாகும்.

NVQ இன் 5-7 மட்டங்களில் கவனக்குவிப்பு செய்தவாறு செயற்றிட்டமானது MV & TT ஐயும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் தரம், வினைத்திறன், நீடித்திருக்கும் TEVT என்பவற்றுக்காக வசதியேற்படுத்தித் துணைபுரியும். TEVT இற்கான தொழினுட்ப வியலாளர் பற்றாக்குறையையும் தரம் வாய்ந்த போதனாசிரியர் குறைபாட்டையும் நிவர்த்தி செய்து, மாற்றுக்கல்வியையும் தொழில்சார் பாதையையும் மாணவருக்கும் TEVT துறை ஆளணியினருக்கும் வழங்கி, பட்டம் பெற வழிசெய்ய செயற்றிட்டமானது அரசாங்கத்துக்கு UNIVOTEC ஐ நிறுவ உதவிபுரியும். ஏனையவற்றுக்கும் மேலாக, பட்டதாரி வேலைத்திட்டங்களை விருத்தி செய்து, தொழினுட்பக் கல்வி இளமானி (B. Tech Ed) தொழினுட்ப இளமாணி (B. Tech) பட்டங்களுக்கு வழிசெய்து இந்த வேலைத்திட்டங்களை வழங்கும் நிறுவனங்களுக்கு UNITEC ஐக் கொண்டதாக வசதிகளையும் உபகரணங்களையும் வழங்கி மேம்படுத்தும். அத்துடன் தற்போதுள்ள தொழினுட்பக் கல்லூரிகளை ஒவ்வொரு மாகாணத்துக்குமான தொழினுட்பக் கல்லூரிகளாக மேம்படுத்தும் சம்பந்தப்பட்ட துறைகளில் NVQ மட்டம் 5, 6 ஐப் பெறுவதற்கு உத்தேச தொழினுட்பக் கல்லூரிகள் நேரடியாக தொழிற்றுறைக்கு உதவிபுரியும்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 5 வருட காலத்துக்கு இந்த செயற்றிட்டம் அமுல் செய்யப்படும்.

இலங்கை நாட்டின் பிரஜைகளிலிருந்து கொழும்பில் அமைந் துள்ள செயற்றிட்ட அமுலாக்கல் அலகுக்கான (PMU) பதவிகளுக்குப் பொருத்தமான தகுதிவாய்ந்த, அனுபவமிக்க தேர்வுநாடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* **செயற்றிட்டப் பணிப்பாளர் (01 பதவி).**- *கடமைகளும் பொறுப்புகளும்.*- (1) PMU பணியாளருக்கு முறையாகப் பொறுப்புக்களை ஒப்படைத்தல். ஒருங்கிணைப்பு, அவர்களது செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், செயலாற்றலை மதிப்பீடு செய்தல் அடங்கலாக PMU வை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தல்.

(2) வருடாந்த மற்றும் ஐந்தாண்டு செயற்றிட்ட அமுலாக்கல், பிரித்தொதுக்கல் திட்டங்களை செயற்றிட்ட செயற்பாடுகளுக்கான, தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் தயாரித்தல்.

(3) ஒத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்காக உரிய ஊக்கத்துடன் கடன்/மானிய ஒப்பந்தத்துக்கு அமைவாக செயற்றிட்டத்தை அமுலாக்கல்.

(4) செயற்றிட்ட செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஒழுங்குசெய்து ஒன்றிணைத்து அமுலாக்கலைக் கண்காணித்தல்.

(5) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின்படி குறிப்பிட்டுள்ளவாறு செயற்றிட்டக் கொள்வனவு விடயங்களில் ஈடுபடுதல்.

(6) வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரித்தலை உறுதிசெய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய காலத்தில் சமர்ப்பித்தல்.

(7) அரசாங்க கணக்கீட்டு நியமங்கள், நடைமுறைகளுக்கமைய மாதாந்த/காலாண்டு/வருடாந்த நிதி அறிக்கைகளை உருவாக்க ஏற்றவாறான நிதி முகாமைத்துவத்தைப் பராமரித்தல்.

(8) செயற்றிட்ட செலவினங்களுக்கான வெளிநாட்டு நிதிவழங்கல் முகவராண்மையிலிருந்து உரிய காலத்தில் நிதிகளை மீளப் பெறுதல்/மீளிடலை உறுதிப்படுத்தல்.

(9) கடன்/மானிய ஒப்பந்தத்தின் கணக்காய்வுத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்தல்.

(10) அமைச்சு மற்றும் அரசின் தேவைகளின் கணக்காய்வுத் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தல்.

(11) அமுலாக்கலின்போது எழக்கூடிய பிரச்சினைகளை உடன் இனங்காணலும் காலத்துக்கு அமைவான பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளலும்.

(12) கடன்/மானிய ஒப்பந்தத்தின்படியும் உயர் அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கேற்ப கண்காணிப்பு, மதிப்பீட்டின் மூலம் செயற்றிட்ட முன்னேற்ற மற்றும் ஏனைய அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(13) செயற்றிட்ட அமுலாக்கல் தொடர்பாக வெளிநாட்டு நிதி வழங்கும் முகவராண்மையுடனும் ஏனைய பங்காளருடனும் நெருங்கிய மற்றும் சுமுகமான உறவை ஏற்படுத்திப் பேணுதல்.

(14) காலத்துக்குக் காலம் உரிய அமைச்சின் செயலாளரால் ஒப்படைக்கப்படும் வேறு ஏதும் பணிகள்.

**வேண்டப்படும் தகைமைகளும் அனுபவங்களும்.**- பொறியியல், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம் கணக்கியல் அல்லது ஏதாவதொரு தொடர்புபட்ட துறையில் இளமாணிப் பட்டத்துடன் 8 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட அனுபவத்துடன் கூடிய வெளிநாட்டு நிதியீட்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் 12 வருட அனுபவம் விரும்பப்படும்.

அல்லது

ஒரு இளமாணிப் பட்டத்துடன் கூடிய பட்டப்பின் தகைமைகள் (டிப்ளோமா/முதுமாணிகள்) அல்லது பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்டதோர் தொழிற்றுறைசார் நிறுவனத்தில் இணை அங்கத்துவத்துடன் 5 வருடங்கள் வெளிநாட்டு நிதியீட்டு அபிவிருத்திச் செயற்றிட்ட அனுபவத்துடன் கூடிய 8 வருட அனுபவம்.

2. **பிரதிச் செயற்றிட்டப் பணிப்பாளர் (01 பதவி)**.- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- (1) செயற்றிட்டத்தின் எண்ணக்கரு சார்ந்த சட்டக வேலையை அமுலாக்கல்.

(2) உத்தேச தொழினுட்ப பல்கலைக்கழகத்துக்கான முறையியல்களை, நடைமுறைகளை, வழிகாட்டல்களை, இயக்கற் கைநூல் என்பவற்றை விருத்தி செய்வதற்கான விருத்திக் குழுவுக்கு வழிகாட்டல்.

(3) CoTs களுக்கும் UNIVOTEC க்குமான மாணவர் தெரிவு, அனுமதிக்கான நடைமுறைகளை இடைநிரப்பு நிகழ்ச்சித் திட்டங்களுடன் விருத்தி செய்தல்.

(4) TVEC பதிவு செய்யும் நடைமுறைகளை ஏற்படுத்தி நிறுவனக் கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.

(5) CoTs களுக்கும் UNIVOTEC க்குமான இனங்காணப்பட்ட பாடநெறிகளுக்குரிய தொழில்சார் நியமங்களையும் பாடவிதான/கற்றற் பொதிகளையும் பூரணப்படுத்தல்.

(6) தொழிற்றுறையின் துணையுடன் கற்பித்தல் மற்றும் பயிற்சி உபகரணங்களை இனங்காணலில் உதவி செய்தல்.

(7) செயற்திட்டத்தை நடாத்துவதற்கு செயற்றிட்டப் பணிப்பாளருக்கு உதவி செய்தல்.

(8) செயற்றிட்டப் பணிப்பாளரால் ஒப்படைக்கப்படும் வேறேதும் பணிகள்.

**வேண்டப்படும் தகைமைகளும் அனுபவங்களும்.**-

1. பொறியியல், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல் அல்லது ஏதாவதொரு தொடர்புபட்ட துறையில் இளமாணிப் பட்டத்துடன் 12 வருட அனுபவம்.

அல்லது

2. ஒரு இளமாணிப் பட்டத்துடன் கூடிய பட்டப்பின் தகைமைகள் (டிப்ளோமா/முதுமாணிகள்) அல்லது பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்டதோர் தொழிற்றுறைசார் நிறுவனத்தில் இணை அங்கத்துவத்துடன் 8 வருடங்கள் அனுபவம் விரும்பப்படும்.

3. **செயற்றிட்ட முகாமையாளர் (பணியாளர் பயிற்சியும் சமூக சந்தைப்படுத்தலும்) (01 பதவி)**.- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- (1) செயற்றிட்ட எண்ணக்கருவின் அடிப்படையிலான பணியாளர் அபிவிருத்தித் திட்டத்தை விருத்தி செய்து அமுலாக்கல்.

(2) தேசிய தகைமை சட்டக வேலையை முன்னிருத்தும் TEVT துறையை இனங்காண்பதற்காக சமூக சந்தைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்து அமுலாக்கல்.

(3) தொழினுட்பவியற் கல்லூரிகளில் போதிக்கும் உத்தியோகத்தருக் கான பட்டதாரித் தகைமைகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்கல்.

(4) TEVT துறையுடன் தொடர்பான தரத்தை விருத்தி செய்வதற்காக செயற்றிட்ட நிறுவனங்களில் போதனையாளர், போதனையாளர் அல்லாத பணியாளரைப் பயிற்றுவித்தல்.

(5) சம்பந்தப்பட்ட பயிற்சியின்போது வெளியீடு அடிப்படையிலான வரவுசெலவு, மாணவர் பதிவு, பழைய மாணவர் பதிவு போன்றவற்றை அறிமுகஞ்செய்தல்.

(6) செயற்றிட்ட நிறுவனங்களில் தன்னியக்க முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்காக EMIS, MIS அமைப்புக்களை தொழினுட்ப பணியாளர் உபயோகிப்பதில் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

4. **செயற்றிட்ட முகாமையாளர் (தகவல், தொடர்பாடல், தொழினுட்பவியல்) (01 பதவி)**.- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- (1) வெளியீடு அடிப்படையிலான வரவுசெலவு முறைமை, மாணவர் பதிவு, பழைய மாணவர் பதிவு என்பனவற்றுக்கான நடைமுறைகளை விருத்தி செய்வதில் வசதியேற்படுத்தல்.

(2) வெளியீடு அடிப்படையிலான வரவுசெலவு முறைமை, மாணவர் பதிவு, பழைய மாணவர் பதிவு போன்றவற்றுக்கான மென்பொருளை இனங்கண்டு விருத்தி செய்து நிறுவுதல்.

(3) வெளியீடு அடிப்படையிலான வரவுசெலவு முறைமை, மாணவர் பதிவு, பழைய மாணவர் பதிவு போன்றவற்றுக்கான அமுலாக்கல் செய்வதற்கான முறையியல், நடைமுறை, மென்பொருள், கைநூல்களை விருத்தி செய்தல்.

(4) மேலே (3) இல் கூறப்பட்டவற்றை நிறுவன ரீதியாக்கலும், நீடித்திருக்கச் செய்தலும்.

(5) விசேடமான அடிப்படையில் தொழில்நுட்ப, தொழில்சார் பயிற்சி

(6) மேற்கூறப்பட்டவற்றை இயக்குவதற்காக தொழினுட்பக் கல்லூரியையும், UNIVOTEC ஐயும் தன்னியக்கப்படுத்தப் பொறுப்பாகவிருத்தல்.

(7) முன்முயற்சியாக TEVT துறைக்கான ICT விருத்தியை அறிமுகப்படுத்துவதில் பொறுப்பாக இருத்தல்.

**5. செயற்திட்ட முகாமையாளர் - (நலனாய்வு, கண்காணிப்பும் மதிப்பீடும்) -01 பதவி**.- *கடமைகளும் பொறுப்புக்களும்.*-(1) நிகழ்ச்சித் திட்டங்களினதும் மாணவர்களினதும் செயலாற்றலைக் கண்காணித்து மதிப்பீடு செய்யும் முறைமையை விருத்தி செய்து நிறுவுதல்.

(2) செயற்திட்ட அமுலாக்கலின் முன்னேற்றத்தைக் காலத்துக்குக் காலம் கணிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுக் கற்கைகளை நடாத்தி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(3) முக்கிய கட்டங்களுடனான செயற்திட்ட வருட அமுலாக்கல் திட்டத்துக்குரிய வேலைத்திட்டத்தைத் தயார் செய்து செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துதல்.

(4) ஆண்டு மாதாந்த, காலாண்டு நிதி மற்றும் பௌதீக ரீதியான செயலாற்றல் நிதியமைச்சு, திட்ட அமுலாக்கல் அமைச்சு, தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு மற்றும் தேவைப்படும்போது ஏதும் அமைப்புகளுக்கு காலத்துக்குக் காலம் அனுப்பிவைத்தல்.

(5) செயற்திட்ட வெளியீட்டின் அடிப்படையில் நடாத்தப்பட்ட முன்னேற்றத்தின் செயலாற்றலையும் மாணவரது இசைவாக்கலையும் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

(6) செயற்திட்ட ஆவணத்தில் இனங்காணப்பட்ட ஆய்வுகளையும் கற்கைகளையும் நடாத்த அமைச்சுக்கும் TVEC க்கும் துணைபுரிதல்.

(7) செயற்திட்ட அமுலாக்கலின் வெற்றியை பொது மற்றும் தனியார் துறைப் பங்காளருக்கும் அறிவித்தவாறு அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

(8) செயற்திட்ட இலக்குகளைப் பேணுவதற்காக செயற்திட்டத்தின் குறிகாட்டித் திட்டத்தைப் பராமரித்தல்.

(9) சம்பந்தப்பட்ட முகவராண்மைகளுக்கு உள்ளீட்டு/வெளியீட்டுத் தகவல்களை அனுப்பிவைத்தல்.

**மேற்கூறப்பட்ட 3, 4, 5 பதவிகளுக்கான தகைமைகளும் அனுபவமும்.-**

1. பொறியியல், முகாமைத்துவம், பொருளியல் அல்லது வேறேதும் சம்பந்தப்பட்ட துறையில் இளமானிப் பட்டப் படிப்புடன் அரசாங்கம் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களில்/ அல்லது நன்கொடையாளர் நிதிபெறும் செயற்திட்டங்களைக் கையாண்ட 12 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்புத் தகுதியுடன் (டிப்ளோமா/முதுமானி) கூடிய இளமானிப் பட்டம் அல்லது இலங்கை வழங்கல் மற்றும் பண்ட முகாமைத்துவ டிப்ளோமா அல்லது சம்பந்தப்பட்ட துறையில் தேவைப்படும் தொழில்நுட்ப நிபுணத்துடன் கூடிய தொழில்சார்ந்த 8 ஆண்டுகள் அனுபவத்துடனான அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத்துவ நிறுவனமொன்றின் பாரிய நிறுவக உறுப்பாண்மை.

அல்லது

2. கொள்கை மற்றும் வண்ணக்கருச் சட்டக வேலைகளிலும் TEVT துறையில் அதன் தொழிற்பாடுகளிலும் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**6. செயற்திட்ட முகாமையாளர் (கொள்வனவு) -01 பதவி**.- *கடமைகளும் பொறுப்புக்களும்.*-(1) கொள்வனவுத் திட்டத்தை விருத்தி செய்து உரிய காலத்தில் அமுலாக்கஞ் செய்வதை உறுதிசெய்தல்.

(2) ADB மற்றும் அரச கொள்வனவு வழிகாட்டல்களுக்கு அமைய பொருத்தமான கொள்வனவு நடைமுறைகளை ஏற்படுத்தல்.

(3) செயற்திட்ட முகாமையாளர்கள் மற்றும் செயற்திட்டப் பங்காளர்களுடன் ஆலோசனை, பண்டங்கள், சேவைகள், சிவில் கட்டுமானங்கள் கொள்வனவு நடைமுறைகளில் இணக்கங்காண்பதை உறுதிசெய்தல்.

(4) கேள்விப்பத்திர ஆவணங்கள், RFP ஒப்பந்தங்கள் போன்ற கொள்வனவுச் செயற்பாடுகளோடு தொடர்புடைய எல்லா ஆவணங்களையும் தயாரித்தல்.

(5) செயற்திட்டத்தினதும், அமைச்சினதும் கொள்வனவுக் குழுக்கில் செயலாளராகக் கடமையாற்றல்.

(6) தொழினுட்ப மதிப்பீட்டுக்கான ஆளணியினரை இனங்காணலும் வசதிசெய்து கொடுத்தலும்.

(7) கேள்விப் பத்திரங்களையும் உரிய காலத்து பொருள் மற்றும் சேவைகள் வழங்கலையும் மதிப்பீடு செய்தல்.

(8) செயற்திட்டப் பணிப்பாளருக்கு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின்போது உதவுதல்.

(9) நன்கொடையாளர்கள், அரச முகவராண்மைகள், வழங்குநர்கள், செயற்திட்டத்தில் பங்குபற்றும் நிறுவனங்களுடன் நெருங்கிய உறவுகளைய ஏற்படுத்திப் பேணுதல்.

(10) நன்கொடை வழங்கும் நிறுவனங்கள், தேசிய கொள்வனவுத் திணைக்களம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கொள்வனவு தொடர்பாகத் தேவைப்படும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(11) காலத்துக்குக் காலம் செயற்திட்ட பணிப்பாளரால் ஒப்படைக்கப்படும் வேறேதும் கடமைகள்.

**வேண்டப்படும் தகைமைகளும் அனுபவங்களும்.**- 5 வருட வழங்கல்கள் மற்றும் மூலப்பொருள் முகாமைத்துவ இயலுமை உடன் 8 வருட துறைசார் (அரச/தனியார்) அனுபவங்ளுடன் கூடிய ஒரு இளமானிப் பட்டம்

அல்லது

க. பொ. த. (உ. த.) உடன் வழங்கல்கள் மற்றும் மூலப்பொருள் முகாமைத்துவ இலங்கை நிறுவனத்தின் டிப்ளோமா உடன் கூடிய அரச அல்லது தனியார் நிறுவனத்தில் 10 வருட அனுபவம்.

**7. செயற்திட்ட முகாமையாளர் (கொள்வனவு) பதவி 01.**- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- (1) செயற்திட்டத்துக்குக் கிடைக்கப்பெறும் நிதிவளங்களை முகாமைத்துவம் செய்வதற்காக உறுதியான கணக்கீட்டு நடைமுறைகளையும், அமைப்புக்களையும் நிறுவுதல்.

(2) செயற்திட்ட செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் செம்மையான, முழுமையான, காலத்துக்குரிய நிதிசார் தகவல்களை வழங்குதல்.

(3) செயற்திட்டத்தின் வருடாந்த செலவு - செலவுத் திட்டத்தையும் நிதி விநியோகத் திட்டத்தையும் தயாரித்தல்.

(4) அரச மற்றும் வெளிநாட்டு நிதி முகவராண்மை நடைமுறைகளுக்கமைவாக செயற்திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதிவளங்களின் பொறுப்புணர்வுத் தன்மையை உறுதிசெய்வதுடன் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை முன்னெடுப்புச் செய்தல்.

(5) செயற்திட்ட செலவினங்களுக்காக வெளிநாட்டு நிதி முகவராண்மை யிலிருந்து நிதிகளை உரிய காலத்தில் மீளப்பெறுதல்/கொடுப்பனவு செய்தல்/ மீள நிதியிடுதல் என்பனவற்றை உறுதிசெய்தல்.

(6) மாதாந்த/காலாண்டு/வருடாந்த நிதியறிக்கைகளை உரிய காலத்தில் தாயரித்து நன்கொடையாளர், நிதியமைச்சு, திட்ட அமுலாக்கல் அமைச்சு மற்றும் செயற்திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கையின்படி அனுப்பிவைத்தல்.

(7) கணக்காய்வு தேவைகளுக்கமைய இசைவாகுதல்.

(8) வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்களில் நிதி பகிர்ந்தொதுக்கலில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச முகவராண்மைகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.

*தகைமைகளும் அனுபவமும்.*- அங்கீகரிக்கப்பட்டதோர் தொழிற்துறைசார் நிதி அல்லது முகாமைத்துவ அல்லது கணக்கியல் துறை (CIMA/ACCA/ICASL) நிறுவனத்தில் இணை அங்கத்துவம்.

மற்றும்

வெளிநாட்டு நிதியீட்டு அபிவிருத்தி செயற்திட்டத்தில் 8 வருட நிதி முகாமைத்துவ அனுபவம் விரும்பப்படும்.

*வாண்மைத்துவத் தேர்ச்சிகள்.*-(1) தற்போதைய சர்வதேச/உள்ளூர் கணக்கீட்டு நியமங்களைப் பற்றிய சிறந்த அறிவும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் நடைமுறைகளும்.

(2) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள கணக்கியல் கொள்கைகள், நடைமுறைகள் பற்றிய சிறந்த அறிவு, பொதுத் துறையின் கணக்கீட்டு மற்றும் செலவினங்கள் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றிய அறிவும் அனுபவமும்.

(3) செயற்திட்டமொன்றின் அல்லது உள்ளார்ந்த மட்டத்தில் கணக்கியல் முறைமைகளை வடிவமைத்தல், ஆவணப்படுத்தல், அமுலாக்கம் செய்தலில் அனுபவம்.

(4) கணினி பற்றிய தேர்ச்சி

(5) எழுத்துமூல, பேச்சு மூலமான உயர் மட்டமான ஆங்கிலமொழித் தேர்ச்சி.

**8. செயற்திட்டப் பொறியியலாளர் - 01 பதவி.**- *கடமைகளும் பொறுப் புக்களும்.*-(1) டிப்ளோமா மட்ட பயிற்சி வேலைத் திட்டங்களை மாகாண மட்டத்தில் நடத்துவதற்காக வேலைக்கூடங்களையும், ஏனைய வசதிகளையும் வடிவமைத்து. விருத்தி செய்தலை/மீள் அமைத்தலை அமுலாக்கல்.

(2) சிவில் கட்டுமான செயற்பாடுகளில் அபிவிருத்தி/மீளமைத்தலுக்கான கிரய மதிப்பீட்டையும் வரைபடங்களையும் தயாரித்தல்.

(3) ஒவ்வொரு CoTs க்கும் மாகாண மட்டத்தில் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரித்தல்.

(4) உத்தேச தொழினுட்ப பல்கலைக்கழகத்துக்கான உட்கட்டமைப்பு வேலைக்குரிய முதன்மைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

(5) உத்தேச தொழினுட்ப பல்கலைக்கழகத்துக்கான கிரய மதிப்பீட்டுடன் கூடிய விவரமான அளவைப் பட்டியல் தயாரித்தல்.

(6) செயற்திட்டத்தின் சிவில் கட்டுமான செயற்பாடுகளைக் கூர்ந்து மேற்பார்வை செய்து, தேவையான விதந்துரைகளை அனுமதிக்காக மேற்கொள்ளல்.

(7) சிவில் கட்டுமான செயற்பாட்டின் கொள்வனவுக்காக வசதிகளை ஏற்படுத்தல்.

(8) செயற்திட்ட பங்கேற்பு நிறுவனங்கள், பங்காளர்கள் மற்றும் தேவையான ஏனைய பகுதியினர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.

(9) நன்கொடை வழங்கும் முகவராண்மைகள், PPI போன்றவற்றினால் வேண்டப்படுவதற்கேற்ப அறிக்கைகள் தயாரித்தல்.

*தகைமைகளும் அனுபவமும்.*- (1) பொறியியல் சம்பந்தப்பட்ட துறையில் இளமானிப் பட்டப் படிப்புடன் அரசாங்கம் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை/அல்லது நன்கொடையாளர் நிதிபெறும் செயற்திட்டங்களைக் கையாண்ட 12 ஆண்டு அனுபவம்.

அல்லது

தொழில்சார் மற்றும் தொழினுட்பப் பயிற்சித்துறை இலங்கையில் அதன் கொள்கைச் சட்டகம் மற்றும் அதன் தொழிற்பாடுகள் பற்றிய பரிச்சயம்.

மேற்கூறப்பட்ட 1 - 8 பதவிக்கான வாண்மைத்துவத் தேர்ச்சிகள் :-

(1) செயற்திட்டத்தினால் வேண்டப்படும் தொழில்நுட்ப சேவைகளை வழங்கக்கூடியதாகவும் செயற்திட்டப் பணிப்பாளருக்கு உதவக்கூடியதாகவுமிருத்தல்.

(2) தேவைப்படும் நிபுணத்துவத்துறையில் சுயாதீனமாக செயற்திட்டம் தொடர்பான செயற்பாடுகளைக் கையாளக்கூடிய நிரூபிக்கப்பட்ட திறமையைக் கொண்டிருத்தல்.

(3) ஏனைய குழு உறுப்பினரின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் தூண்டியவாறு குழுச்சூழலில் வினைத்திறனுடன் தொழிற்படக்கூடிய திறமையைக் கொண்டிருத்தல்.

(4) அமுலாக்கல் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து வளமிக்கதாகவும், தொடர்ச்சியாகவும் தீர்க்கக்கூடிய திறமையைக் கொண்டிருத்தல்.

(5) கணினித் தேர்ச்சி

(6) எழுத்துமூல, பேச்சு மூல உயர்மட்ட ஆங்கிலமொழித் தேர்ச்சி.

9. **கொள்வனவு உத்தியோகத்தர் - 02 பதவிகள்.**- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- மேலே 5 இல் குறிப்பிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் கொள்வனவு முகாமையாளருக்கு உதவிசெய்தல்.

*தகுதிகளும் அனுபவமும்.*- (1) 8 ஆண்டு அனுபவத்துடன் இளமானிப்பட்டம். இவற்றுள் 5 ஆண்டுகள் அரச/தனியார் துறையில் கொள்வனவு ஒப்பந்த முகாமைத்துவ அனுபவம்.

அல்லது

க. பொ. த. (உ. த.) உடன் இலங்கை வழங்கல்கள் மற்றும் பண்ட முகாமைத்துவ நிறுவனத்தின் டிப்ளோமாவுடன் அரச/தனியார் துறையில் கொள்வனவு ஒப்பந்த முகாமைத்துவத்தில் 10 ஆண்டுகள் அனுபவம்.

(2) வெளிநாட்டு நிதிபெறும் செயற்திட்டமொன்றில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பிணைப்பத்திரங்களைக் கையாண்ட 2 ஆண்டு அனுபவத்துடன் ICB, IS, LCB (குறிப்பாக ADB நடைமுறைகள்) போன்ற நடைமுறைகளிலும் அரச பிணைப்பத்திர நடைமுறைகளிலும் பரிச்சயமிருத்தல்.

(3) கொள்கை மற்றும் எண்ணக்கருச் சட்டக வேலைகளிலும் TEVT துறையில் அதன் தொழிற்பாடுகளிலும் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

10. **செயற்திட்ட உத்தியோகத்தர் - 03 பதவிகள்.**- *கடமைகளும் பொறுப்புக்களும்.*- தெரிவுசெய்யப்பட்ட துறையில் செயற்பாடுகளை நிறைவேற்றுதில் மேலே குறிப்பிட்ட 3, 4 இல் நிரலிடப்பட்டவற்றில் செயற்திட்ட முகாமையாளருக்கும் 8 இல் செயற்திட்ட பொறியியலாளருக்கும் உதவி செய்தல்.

*தகைமைகளும் அனுபவமும்.*- 1. 8 ஆண்டு அனுபவத்துடன் இளமானிப்பட்டம். இதில் 5 ஆண்டுகள் அரச/தனியார் வேலை செய்த அனுபவம்.

அல்லது

க. பொ. த. (உ. த.) பத்திரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் டிப்ளோமா சம்பந்தப்பட்ட அரச/தனியார் துறையில் 10 ஆண்டுகள் அனுபவம்.

அத்துடன்

2. சம்பந்தப்பட்ட துறையில் வெளிநாட்டு நிதியுதவி பெற்ற செயற்திட்டமொன்றில் குறைந்தபட்சம் மிக அண்மைக்கால 3 ஆண்டு அனுபவம்.

மேலே குறிப்பிட்ட 9 ஆம், 10 ஆம் பதவிக்கான வாண்மைத்துவத் தேர்ச்சிகள்

(1) குறைந்தபட்ச மேற்பார்வையுடன் செயற்றிட்ட முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் செயற்றிட்டச் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்யக்கூடிய ஆற்றல்.

(2) வெளிப்படுத்தக்ககூடிய தொடர்பாடல் திறன் (எழுத்துமூல/வாய்மொழிமூல).

(3) வளமிக்கதாயும், தொடர்ச்சியாகவும், பொறுமையுடனும் வேலைசெய்யும் ஆற்றல் வெளிப்பாடு.

(4) எழுத்துமூல, பேச்சுமூலமான ஆங்கில மொழியறிவு.

(5) சிறந்தளவான கணனி தேர்ச்சி.

*வயது எல்லை.*- விண்ணப்ப முடிவு திகதியில் 1 - 8 வரையான பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 60 வயதுக்குக் குறைந்தோராகவும் 9 - 17 வரையான பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 45 வயதுக்குக் குறைந்தோராகவும் இருத்தல் வேண்டும்.

*ஊதியம்.*- தேர்வுநாடிகள் தகுதிக்கும் அனுபவத்துக்கும் அமைவாகப் பேசித் தீர்க்கப்படலாம். (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 10/26.12.2000 இன் அடிப்படையில்)

*பொது நிபந்தனைகள்.*- (1) ஊழியரதும் வேலைகொள்வோரதும் ஊழியர் சேமலாப நிதிக்கான (EPF) பங்களிப்பு சம்பளத்தின்படி முறையே 8% உம் 12% உம் ஆகும். அதேவேளை ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான வேலைகொள்வோரின் பங்களிப்பு சம்பளத்தின் 3% ஆகும்.

(2) இவை முழுநேரப் பதவிகளாகும். ஒப்பந்த அடிப்படையில் முதலில் 1 ஆண்டுக்குரியது. பின்னர் வருடாந்தம் செயலாற்றலின் அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.

(3) வெளிநாட்டு நிதிவழங்கப்படும் செயற்றிட்டங்களில் வேலைசெய்த அனுபவம் மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.

தேவையான தகுதிகளுடன்கூடிய விண்ணப்பதாரிகள் குறும்பட்டியற்படுத்தப்பட்டு நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்.

உறவினர் அல்லாத அறிமுகமான இருவரின் பெயர், முகவரியுடன் விண்ணப்பமானது பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரங்களுடனும் சான்றிதழ்களின் ஒளிப்படப்பிரதிகளுடனும் பதிவுசெய்யப்பட்ட தபாலில் 05 நவெம்பர் 2006 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

2006.08.18 ஆந் திகதியும் 1459 ஆம் இலக்கமும் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இவ் செயற்திட்ட பதவி விபரங்களுக்கு இவ் வர்த்தமானி அறிவித்தலில் உள்ள தகைமைகளுக்கு அமைவாக மீண்டும் எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்,
வாழ்க்கைத்தொழில்,
தொழினுட்பப் பயிற்சி அமைச்சு.

"நிபுணத்தா பியஸ",
354/2, எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 5,
2006, செத்தெம்பர் 29.

10-295

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுள்வேத வைத்திய சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2006

இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை ஆயுள்வேத திணைக்களத்தினால் கார்த்திகை 2006 இல் நடத்தப்பெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. இப்பரீட்சை ஆயுள்வேத திணைக்களத்தினால் நடாத்தப்பெறுவதுடன் இப்பரீட்சை தொடர்பாக திணைக்களத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகக் கடமைப்பட்டவராவார்.

2. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2006.11.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக "ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை ஆயுள்வேத ஆணையாளருக்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் இல்லை. அதன்பின் தோற்றும் பரீட்சை முழுவதற்குமாக ரூபா 90 க்கு பெறுமதியான முத்திரையும் ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு ரூபா 50 பெறுமதியான முத்திரையும் ஒட்டி பெயர், கையெழுத்துடன் திகதியும் இட்டு அம்முத்திரை பாவனையற்றதாக்கப்படல் வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்)

4. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு ஆயுள்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படாது. எவரேனும் பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர், "ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" என்னும் முகவரிக்கு அதுபற்றி பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட திகதி.

5. **பரீட்சைத் திட்டம்.**- இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையில் சேவை யாப்புக்கு ஏற்றவாறு அதனால் அனுமதிக்கப்பட்ட பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நடத்தப்பெறும்.

(i) *கணக்கு நடைமுறைகள்.*- கீழ்வரும் காரணங்கள் உள்ளடக்கிய ஒரு கேள்வித்தாள் :-
   (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்கு நடைமுறைகள் கையேட்டின் முதலாவது அத்தியாயம். (X)

(ii) தாபன விதிக்கோவை - கீழ்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு கேள்வித்தாள்.

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் முதலாவது தொகுப்பு (volume I) I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII அத்தியாயங்கள்.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் இரண்டாவது தொகுப்பு (Volume II) XLVII யும் XLVIII ஆவது அத்தியாயமும்.

(iii) ஆரோக்கியசாலை பரிபாலனம் - கீழ்வரும் விடயங்கள் சம்பந்தமான வினாத்தாள் -

(அ) ஆரோக்கியசாலை சம்பந்மான உரிமைகள் பேணுவதற்கான சாதாரண சட்டதிட்டங்கள்.
(ஆ) ஆரோக்கியசாலை சுத்தம் பேணல்.
(இ) நோயாளிகள் சம்பந்தமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள்.
(ஈ) நோயாளர்களுக்கான பொருத்தமான உணவு பாணம் பெறும் விதிமுறைகள்.
(உ) மருத்துப்பாக கூடப் பரிபாலனம்.
(ஊ) நோயாளர்களை ஆரோக்கியசாலைக்கு அனுமதிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய சட்டதிட்டங்கள்.
(எ) ஆயுள்வேத திணைக்களத்தின் சாதாரண நிர்வாக விதிமுறைகள்.
(ஏ) ஆயுள்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலைக் கணக்கு, பேரேடுகள் பதிவேடுகள் நடைமுறைப்படுத்துவதற்குரிய பொருத்தமான விதிமுறைகள்.
(ஐ) ஆயுள்வேத சம்பந்தமான நடைமுறை ஒழுங்கமைப்புகள். (Functional Organization)

(iv) அரச மொழிப்பாவனைப் பரீட்சை - சிங்களம்/ தமிழ்

(அ) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைக்கப்பட்ட அலுவலர்கள் சம்பந்தமாக-

(1) தமிழ் மொழிமூலம் வினவப்பட்ட கேள்விகளுக்கு தமிழ் மொழியில் விடை தருதல்.
(2) தமிழ் மொழியில் அமைக்கப்பட்ட வசனம் சிங்கள மொழியில் மொழிபெயர்த்தல்.
(3) சிங்கள மொழியில் அமைக்கப்பட்ட வசனம் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல்.

(ஆ) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைக்கப்பட்ட அலுவலர்களுக்கு -

(4) சிங்கள மொழியில் கேட்கப்படும் கேள்விகள் சிங்கள மொழியில் பதில் தருதல்.
(5) சிங்கள மொழியில் அமைக்கப்பட்ட வசனங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல்.
(6) தமிழ் மொழியில் அமைக்கப்பட்ட வசனம் சிங்கள மொழியில் மொழிபெயர்த்தல்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெறுதல் அவசியம்.

ஆர். பி. டபிள்யு. குணவர்தன,
ஆயுள்வேத ஆணையாளர்,
ஆயுள்வேத திணைக்களம்.

ஆயுள்வேத திணைக்களம்,
நாவின்ன,
மகரகம,
2006.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுள்வேத வைத்திய சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2006**

பரீட்சை எண் :-

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :-----.
சிங்களம் - S
தமிழ் - T
(பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./Mrs./Miss :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழ்) திரு./திருமதி/செல்வி :-----.

3. முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

4. முதல் எழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களம்/ தமிழ்) :-----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-

6. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் :- (அலுவலகம்/திணைக்களம்/ஸ்தாபனம் பெயரும், விலாசமும்) : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

7. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் :- (அலுவலகம்/திணைக்களம்/ஸ்தாபனம் பெயரும், விலாசமும்) : (சிங்களம்/ தமிழ்) :-----.

8. தற்போது கடமைபுரியும் பதவி :-
(1) பதவி :-----.
(2) நியமனக்கடித இலக்கம் :-----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :-----.

| தொடரிலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |

10. நீங்கள் இதற்கு முன்பு பரீட்சைக்குக் கீழ்வரும் பாடத்திற்கோ பாடங்களுக்கோ தோற்றி சித்தியடைந்துள்ளீர்களா ? :-----.
(நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ ஆரோக்கியசாலை நிர்வாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/ சிங்களம்)
(அப்படியாயின் பாட எண்/பாடம்/பரீட்சை நடைபெற்ற திகதி குறிப்பிடவும்) ?

11. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றுகின்றீர்களா ? :-----.
முதற்முறையாகப் பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :-

| முத்திரைக்கூடு |
|---|

முழுப் பரீட்சைக்கான ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும் ஒரு பாடமாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரையையும் இங்கு ஒட்டிவிடவும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம், அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரைகள் ஒன்றின் மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இதனுள் ஒட்டப்பட்டுள்ள ரூபா .................................... பெறுமதியான முத்திரைகள் செல்லுபடியானவை என்றும் முன்னர் உபயோகிக்கப் படாதவை எனவும் நான் உறுதி மொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகின்றேன்.

...................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ............................................................ ................................................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அத்தாட்சிப்படுத்து கின்றேன்.

............................................................
அத்தாடசிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-228

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.